# Chapter – தமிழகத்தில் வேளாண்மை

## I. சரியான விடையைத் தேர்வு செய்க

**Question 1.**
பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு
அ) 27%
ஆ) 57%
இ) 28 %
ஈ) 49%

**விடை:**
ஆ) 57 %

**Question 2.**
இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு
ஆ) கேழ்வரகு
இ) சோளம்
ஈ) தென்னை

**விடை:**
ஈ) தென்னை

**Question 3.**
2014-15ஆம் ஆண்டில் நெல் உற்பத்தித்திறன்
அ) 3,039 கி.கி
ஆ) 4,429 கி.கி
இ) 2,775 கி.கி
ஈ) 3,519 கி.கி

**விடை:**
ஆ) 4,429 கி.கி

**Question 4.**
தமிழகத்தின் வேளாண் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே
அ) குறைந்துள்ளது
ஆ) எதிர்மறையாக உள்ளது
இ) நிலையாக உள்ளது
ஈ) அதிகரித்துள்ளது

**விடை:**
ஈ) அதிகரித்துள்ளது

**Question 5.**
தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை பொழியும் மாதங்கள்
அ) ஆகஸ்டு – அக்டோபர்
ஆ) செப்டம்பர் – நவம்பர்
இ அக்டோபர் – டிசம்பர்
ஈ) நவம்பர் – ஜனவரி

**விடை:**
இ) அக்டோபர் – டிசம்பர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**Question 1.**
தமிழக மக்களில் பெரும்பான்மையினர் ___ தொழிலையே சார்ந்திருக்கின்றனர்

**விடை:**
வேளாண்

**Question 2.**
தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ___ பருவ மழையாகும்.

**விடை:**
வடகிழக்குப்

**Question 3.**
தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு ___ ஹெக்டேர்கள் ஆகும்.

**விடை:**
ஒரு கோடியே முப்பது லட்சத்து முப்பத்து மூன்றாயிரம்

## III. பொருத்துக.

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1 | உணவல்லாத பயிர்கள் | அ | 79,38,000 | உ |
| 2 | பருப்பு வகைகள் | ஆ | ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர் | ஈ |
| 3 | வடகிழக்குப் பருவமழை | இ | அக்டோபர் – டிசம்பர் | இ |
| 4 | குறு விவசாயிகள் | ஈ | உளுந்து, துவரை, பாசிப்பயிறு | ஆ |
| 5 | 2015 இல் விவசாயிகளின் எண்ணிக்கை | உ | தென்னை | அ |

## IV. குறுகிய வினாக்களுக்கு விடையளி.

**Question 1.**
உணவுப் பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவல்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.

**விடை:**

- உணவுப் பயிர்கள் : 1. நெல், 2. சோளம்
- உணவல்லாத பயிர்கள் : 1. தென்னை , 2. பருத்தி

**Question 2.**
பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான காரணிகள் யாவை?

**விடை:**

- தமிழகத்தில் பயிர் செய்யப்படும் பரப்பளவு 4544000 ஹெக்டேர்கள் ஆகும். இப்பரப்பு ஆண்டுக்கு ஆண்டு மாறும்.
- மழைப்பொழிவு காலத்தில் போதுமான மழை இருந்தால் இப்பரப்பு கூடும்.
- மழை பொய்த்தாலோ, குறைந்தாலோ இப்பரப்பு குறையும், இவ்வாறு பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான முக்கியக் காரணி மழைப் பொழிவு ஆகும்.

**Question 3.**
நிலத்தடி நீரின் அளவையும், தன்மையையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது?

**விடை:**
நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியம் கண்காணிக்கிறது.

**Question 4.**
பயிர்களின் விளைச்சல் எதனைச் சார்ந்து இருக்கிறது?

**விடை:**

- பயிரிடப்படும் நிலப்பரப்பு
- நிலத்தடி நீர்
- மழைப்பொழிவு
- நீர் இருப்பு
- காலநிலை
- சந்தைவிலை
- உற்பத்தித்திறன்

**Question 5.**
சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.

**விடை:**

| | சிறு விவசாயிகள் | குறு விவசாயிகள் |
|---|---|---|
| 1 | 1-2 ஹெக்டேர் நிலப் பரப்பில் சாகுபடி செய்வோர் சிறுவிவசாயிகள் ஆவர். | ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர் குறு விவசாயிகள் ஆவர். |
| 2 | மொத்த விவசாயிகளில் 14 விழுக்காட்டினர் சிறு விவசாயிகள் ஆவர் | மொத்த விவசாயிகளில் 78 விழுக்காட்டினர் குறு விவசாயிகள் ஆவர். |
| 3 | மொத்த நிலப்பரப்பில் 26 விழுக்காடு நிலத்தில் விவசாயம் செய்கின்றனர். | மொத்த நிலப்பரப்பில் 36 விழுக்காடு நிலத்தில் விவசாயம் செய்கின்றனர். |

## V. விரிவான விடையளி.

**Question 1.**
தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.

**விடை:**

- தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை. எனவே தமிழ்நாடு நீர் ஆதாரத்திற்கு தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றையே சார்ந்திருக்கிறது.
- தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவக்காற்று மழையாகும்.
- வடகிழக்குப் பருவமழைநீரை நீர்த் தேக்கங்களிலும், கண்மாய்கள், ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர்.
- வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன.
- தமிழகத்தில் லட்சக்கணக்கான திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன.

- தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது. ஆனால் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் பல இன்னல்களும் ஏற்படுகின்றன.

**Question 2.**
வேளாண்மைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**விடை:**

- தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது. ஆனால் நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்துவது பல இன்னல்களையும் உருவாக்க வல்லது.

- நிலத்தடிக்குச் செல்லும் நீரின் அளவை விட நிலத்திலிருந்து எடுக்கும் நீரின் அளவு கூடப் பிரச்சனை ஏற்படும்

- அதாவது நீர் மட்டம் கீழே செல்லும். இதனால் நீர் முற்றிலும் வற்றிப் போகலாம் அல்லது பாசனத்திற்கு உதவாத நீராக மாறிவிடலாம்.

- தமிழகத்தில் 139 ஒன்றியங்கள் அளவுக்கதிகமாக நீரைப் பயன்படுத்துவதாக மத்திய நிலத்தடி நீர் வாரியம் குறிப்பிட்டுள்ளது.

**Question 3.**
வேளாண் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க

**விடை:**

- தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை. எனவே தமிழ்நாடு நீர் ஆதாரத்திற்கு தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றையே சார்ந்திருக்கிறது.

- தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவக்காற்று மழையாகும்.
- இப்பருவமழையின் நீரை நீர்த்தேக்கங்கள், கண்மாய்கள் மற்றும் ஏரிகளில் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர்.
- இந்நீர் வாய்க்கால்கள் மூலமாக நிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.
- தமிழ்நாட்டில் 2239 வாய்க்கால்கள் உள்ளன.
- ஏரிகளிலிருந்து பாசன வசதி பெறும் நிலத்தின் பரப்பளவு மிகவும் குறைவானதாகும்.
- தமிழகத்தில் ஆழ்த்துளைக் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன.
- தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது.

## VI. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. கிராமம் அல்லது நீங்கள் வசிக்கும் பகுதியில் விளையும் உணவுப் பயிர்களையும், உணவல்லாத பயிர்களையும் ஆராய்க.

2. தஞ்சாவூர் எந்தப் பயிருக்குப் பெயர் பெற்றது? ஏன்? ஆராய்க.

3. தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் தஞ்சாவூர் மாட்டத்தின் நெல் விளைச்சல் குறித்துத் தரவுகளை சேகரிக்கவும்.